

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2024) கோயம்புத்தூரில் ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு மற்றும் ஒப்பணக்கார வீதி வரை ரூ.481 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில், உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி ஆர். ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர் டாக்டர் ஆர். செல்வராஜ், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பாரதியார் பல்கலைக் கழக வளாகத்தில் ரூ.41.57 கோடியில் கட்டடங்கள்

# கோவையில் ரூ.481 கோடியில் மேம்பாலம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**கோவை, ஆக. 10-**

**கோவை, ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு மற்றும் ஒப்பணக்கார வீதி வரை ரூ.481 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மேம்பாலம் மற்றும் பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.41.57 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.8.2024) கோயம்புத்தூரில் நடைபெற்ற விழாவில், ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு மற்றும் ஒப்பணக்கார வீதி வரை ரூ.481 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மேம்பாலம் மற்றும் பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.41.57 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள உயிரி அறிவியல் மற்றும் சமூக அறிவியல் துறைக் கட்டடங்களை திறந்து வைத்தார்.

**கோவை, ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு மற்றும் ஒப்பணக்கார வீதி வரை ரூ.481 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை திறந்து வைத்தல்**

கோவையில் உக்கடம் பகுதியானது உட்கட்டமைப்பு மேம்பாட்டுடன் கூடிய வேகமாக வளர்ந்து வரும் பகுதியாகும். சிறுவாணி, பேரூர், பாலக்காடு மற்றும் பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் இருந்து வரும் வாகனப் போக்குவரத்துகள் கோவை நகருக்குள் உள்ள ஒப்பணக்காரவீதி செல்வதற்கு உக்கடம் பகுதியை கடந்து செல்ல வேண்டும். இதனால் உக்கடம் சந்திப்பில் திருவிழா மற்றும் விசேஷ நாட்களில் பல மணிநேரம் வாகனப் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, உரிய இடங்களுக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டு மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறது. இதை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் கோவை ஆத்துப்பாலம் முதல் உக்கடம் வரை மேம்பாலம் கட்டப்படும் என்று அறிவித்தது.

அதன்படி, கோவை ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பணக்காரவீதி வரை உயர் மேம்பாலம் கட்ட 481 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டு தற்போது முடிவுற்றுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்றைய தினம் ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு மற்றும் ஒப்பணக்கார வீதி வரை கட்டி முடிக்கப்பட்ட மேம்பாலத்தை திறந்து வைத்தார்.

இந்த மேம்பாலமானது, 125 தூண்கள் மற்றும் 107 கண்கள் (Spans) கொண்ட நான்கு வழிப் போக்குவரத்து செல்லக்கூடிய 3.80 கி.மீ நீளமுள்ள மேம்பாலமாகும். உக்கடம் பேருந்து நிலையம் அருகே உள்ள ஏறுதளம் வழியாக பாலகாடு மற்றும் பொள்ளாச்சி பகுதிகளுக்குச் செல்லக்கூடிய வாகனங்கள் எவ்விதப் போக்குவரத்து தடையுமின்றி செல்லவும், பொள்ளாச்சி மற்றும் பாலக்காடு பகுதிகளில் இருந்து வரக்கூடிய வாகனங்கள் அப்பகுதிகளின் அமைக்கப்பட்டுள்ள ஏறுதளம் வழியாக உக்கடம், செல்வபுரம் மற்றும் ஒப்பணக்கார வீதிகளுக்குச் செல்லும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.41.57 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள உயிரி அறிவியல் மற்றும் சமூக அறிவியல் துறைக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

மேலும், பாரதியார் பல்கலைக்கழகத்தில் உயிரி அறிவியல் (Life Sciences) துறை மற்றும் சமூக அறிவியல் (Social Sciences) துறைகளுக்காக தலா 90,210 சதுரடி பரப்பளவில் மொத்தம் 41 கோடியே 57 இலட்சத்து 81 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட ஆறு கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

அக்கட்டடங்களில் தாவரவியல், ஆடை வடிவமைப்பு துறை, இளநிலை அறிவியல் கலப்புப் பாடத்திட்டத் துறை, வணிகவியல் துறை, சமூகவியல் துறை, உளவியல் துறை, தொழில்நுட்பக் கல்வியியல் துறை, சமூகவியல் மற்றும் மக்கள் தொகை ஆய்வுகள் துறை ஆகிய துறைகளுக்கான வகுப்பறைகள், ஆய்வகங்கள், கூட்ட அரங்குகள், நூலகங்கள், அலுவலக அறைகள், துறை தலைவர் அறைகள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

இவ்விழாவில், உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சு.முத்துசாமி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி ஆர். ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர் டாக்டர் ஆர்.செல்வராஜ், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துங்கள்:

## ‘நீட்’ நடைமுறை என்ற பெயரில் சமமற்ற போக்கு திணிக்கப்படுகிறது!

### மக்களவையில் அருண் நேரு பேச்சு!

*திருச்சி, ஆக.10-*

நீட் நடைமுறையை பின்பற்றுகிறோம் என்ற பெயரில் சமமற்ற போக்கு திணிக்கப்படுவதாக மக்களவையில் பெரம்பலூர் தொகுதி திமுக உறுப்பினர் அருண் நேரு தனது முதலாவது கன்னிப் பேச்சின்போது கூறினார்.

மக்களவையில் நிதி மசோதா மீது நடந்த விவாதத்தில்பெரம்பலூர் எம்.பி. அருண் நேரு பேசியதாவது:

இந்தியாஎன்பது மாநிலங்களின் யூனியன். ஆனால், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் நிதி மசோதா மீதான விவாதத்தில் பங்கேற்று மக்களைப் பாதிக்கக் கூடிய பல முக்கிய பிரச்சினைகள் பதிவு செய்யும்போது, ஆளும் கட்சி சார்பில் அவையில் மூத்த உறுப்பினர்கள் இங்கே இருப்பதில்லை. மாநில அரசுகள் அதன் வளர்ச்சித் திட்டங்களுக்கான உள்கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசு போதிய வளங்களைத் தருவதில்லை.

மத்திய நிதியமைச்சர்



வேலை வாய்ப்பு குறித்தும் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கிறது. ஆனால், இந்த நாட்டில் பெரும் பான்மை இளைஞர்கள் முறைப்படுத்தப்பட்ட துறைகளில் பணியாற்றுவதில்லை.

இந்த பட்ஜெட்டில் அசல் மனித ஆற்றலின் தேவை குறித்து சரியாகப் பேசப்படவில்லை. தொழிலாளர் வைப்பு நிதி செலுத்தும் முறையான நிறு வனங்களைப் பார்க்கும்போது அதில் உள்ள ஐந்து சதவீதத்துக்கும் குறைவான மனித ஆற்றலை பற்றியே பட்ஜெட்டில் பேசப்பட்டுள்ளதை அறியலாம்.

எனவே, உண்மையாக பயிற்சியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இளைஞர்களுக்கு நிதியமைச்சரின் பேச்சு எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது. இதனால், முறைப்படுத்தப்படாத பொருளாதாரத்தில் தொடர்புடையவர்களையும் கவனத்தில் கொண்டு பட்ஜெட்டில் சில அம்சங்களை சேர்க்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு விவசாயத்துக்கு தேவையான உரம், மக்களுக்குத் தேவையான உணவு, இளைஞர்களுக்குத் தேவையான கல்வி மிக முக்கியமானவை.

முந்தைய பட்ஜெட் நிதி ஒதுக்கீட்டுடன் ஒப்பிடும் போது, உரத் துக்கு 13.5 சதவீதம், உணவுக்கு 3.1 சதவீதம், கல்விக்கு 2.1 சதவீதம் நிதி குறைக்கப்பட்டுள்ளது. இப்படி இருந்தால் ஒரு நாடு எப்படி வளர்ச்சிப்பாதையில் செல்லும்.

நீட் தேர்வு குறித்து மத்திய அரசு விளக்கும்போதெல்லாம் அதனால் வெளிப்படைத்தன்மை, சமத்துவம் ஆகியவை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறுகிறது. இந்த நடைமுறை சிறப்பானதாக இருக்கலாம் என மத்திய அரசு கருதலாம். ஆனால், அதில் குறைபாடுகள் உள்ளன. இந் அரசின் தவறான கொள்கை யால் எனது தொகுதிக்குள்பட்ட பகுதியில் வசித்து வந்த மாணவி அனிதா உயிரிழந்தார். இந்த தேர்வு நடைமுறை எதை தரும் என்பது தேவையில்லை. அதன் முடிவுகள் என்னவாகின்றன என்பதே முக்கியம்.

நீட் நடைமுறை என்ற பெயரில் சமமற்ற போக்கு திணிக்கப்படுகிறது. எனவே, நிலைமை கையை மீறிச்செல்லும் முன்பாக, இதில் தொடர்புடைய ஒவ்வொருக்கும் தனிப்பட்ட முறையில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துங்கள்.

இவ்வாறு அருண்நேரு எம்.பி பேசினார்.



சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119 அ வட்ட கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சி.ஐ.டி.காலனி இல்லத்தில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருவுருவப் படத்திற்கு நினைவு அஞ்சலி செலுத்திய பிறகு, கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி வட்ட கழக செயலாளர் லைனர் கே.பிரபு, தலைமையில், மாவட்ட கழக துணைச் செயலாளர் ஆர்.என்.துரை முன்னிலையில் 500 மகளிர்களுக்கு புடவை வழங்கினார். உடன், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, மகளிர் அணி புரவலர் விஜயா தாயன்பன், மாநில மகளிர் அணி செயலாளர் எலன்டேவிட்சன், மாநில மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி, மாநில மகளிர் துணைச் செயலாளர் குமரி விஜயகுமார், நாமகிரிப்பேட்டை ஒன்றிய செயலாளர் கே.பி.இராமசுவாமி, ஏ.ஜி.ரவி, எட்வர்டு, நாமக்கல் மோகன், சேலம் சுஜாதா, மாமன்ற உறுப்பினர் கமலா செழியன் மாநில, மாவட்ட, பகுதி,வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.